**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு. மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 04–ம் நாள்
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் புதன்கிழமை
******

**<u>அசல் வழக்கு எண். 232/2020ல் இடைமனு எண்.15/2025</u>**

1. அனிதா
2. மகேஷ் **...மனுதாரர்கள்/வாதிகள்**

...எதிர்...

1. கருணாகரன்
2. மனோகரன்
3. இளங்கோவன்
4. இளவரசன், சார்பாக அவரின்
அதிகாரம் பெற்ற முகவர் 6ம் பிரதிவாதி
கலையரசி மூலமாக
5. தமிழரசி
6. கலையரசி
7. சார்–பதிவாளர்,
செம்பனார்கோயில். **...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக கடந்த 10.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:15:51 +0530

**உத்தரவு**

பிராதை திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட கோரி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை–6 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

**(1.1)** மனுதாரர் மகேஷ் அசல் வழக்கில் இரண்டாம் வாதி என்றும், முதல் மனுதாரர்/முதல் வாதியான அனிதா இம்மனுதாரரின் மனைவி என்றும், மனுதாரர்கள் அசல் வழக்கில் A அட்டவணை சொத்தில் 1 முதல் 6 பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், B அட்டவணை சொத்தைப் பொறுத்து 3ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் செல்லாது என்று விளம்புகை பரிகாரமும் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும்,

**(1.2)** மேற்படி வழக்கில் விசாரணை நடைபெற்று வருவதாகவும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரரை பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்காக கெடு போடப்பட்டுள்ளதாகவும்,

இந்நிலையில், இந்த வழக்கில் B அட்டவணை சொத்தாக செம்பதனிருப்பு புல எண் 75ல் 33.50 ஏர்ஸ் என்று கூறுவதற்கு பதில் 33 ஏர்ஸ் என்று கூறிவிட்டதாகவும், அது போல கிரய ஆவண எண்.1591/2013 என்று கூறுவதற்கு பதில் 2484/2013 என்றும், கிரய ஆவண தேதி 08.08.2013 என்று கூறுவதற்கு பதில் 27.12.2013 என்றும் பிராதின் 13,16 பாராவிலும் பொறுமான விபரத்திலும், பரிகாரம் கோரும் பாராவிலும் கூறிவிட்டதாகவும்,

**(1.3)** மேலும் A அட்டவணை சொத்தின் அருகே ஒரு பக்க நாங்கெல்லையாக வாதிகள் நிலம் உள்ளது என்பதைக் காட்ட வேண்டி தான் ஆவண எண் 2484/2013 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் கவனக்குறைவாக தட்டச்சு செய்யும் போது B அட்டவணை சொத்தின் ஆவண



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:15:57 +0530

எண்ணான 1591/2013ஐ குறிப்பிடாமலும் அதன் பரப்பை குறிப்பிடாமலும் அதற்குரிய நாங்கெல்லையை குறிப்பிடாமலும், ஆவண எண் 2484/2013 ஆவணத்தின் பரப்பு, நான்கெல்லைகள் தட்டச்சு செய்யப்பட்டுவிட்டதாகவும்,

**(1.4)** ஆவண எண் 1591/2013க்கான ஆவணத்தில் உள்ள சொத்து தான் வழக்கில் மனுதாரர் குறிப்பிடும் சுப்பு படையாட்சியின் சொத்து என்றும், அந்த சொத்து சுப்பு படையாட்சியின் மகன்கள் கஞ்சமலை (1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தை), கோவிந்தராசு, மற்றும் மனுதாரர் தந்தை அரங்கசாமி ஆகியோருக்கு கூட்டுரிமையுள்ள சொத்து என்றும், அதைப்பொருத்து 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தங்களுக்குள் 1591/2013 என்ற ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதற்காக தான் B அட்டவணை சொத்து இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும்,

**(1.5)** B அட்டவணை சொத்தைப் பொருத்து எந்த கேள்வியும் பிரதிவாதி வழக்கறிஞரால் இதுவரை கேட்கப்படவில்லை என்றும், எனவே வழக்கு விசாரணைக்கு வந்து விட்டாலும் எதிர்மனுதரர்களுக்கு எந்தவித குந்தகமும் ஏற்படபோவதில்லை என்றும், இந்த வழக்கில் B அட்டவணை சொத்தின் சொத்து விபரம் நாங்கெல்லை மற்றும் ஆவண எண் தேதி இவற்றைப் பொருத்து பிராதில் திருத்தம் செய்வது அவசியம் என்றும், கீழ்க்காணும் திருத்தங்களைக் குறிப்பிட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>திருத்தம் செய்ய வேண்டிய விபரம்:</u>**

**திருத்தம் 1:**

பிராது பாரா 12ல் 4வது வரியில் "27.12.2013" மற்றும் "2484/2013" என்பதை நீக்கிவிட்டு முறையே "08.08.2013" மற்றும் "1591/2013" என்று சேர்க்க வேண்டும்.

**திருத்தம் 2:**

பிராது பாரா 13ல் கீழிருந்து 4வது வரி மற்றும் 3வது வரியில்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:16:04 +0530

"27.12.2013" மற்றும் "2484/2013" என்பதை நீக்கிவிட்டு முறையே "08.08.2013" மற்றும் "1591/2013" என்று சேர்க்க வேண்டும்.

**திருத்தம் 3:**

பிராது பாரா 16ல் 5வது வரியில் "27.12.2013" என்பதை நீக்கி விட்டு "08.08.2013" என்று சேர்க்க வேண்டும்.

**திருத்தம் 4:**

பிராது பாரா 17 பொறுமான விபரத்தில் ஆ பகுதியில் "27.12.2013" மற்றும் "2484/2013" என்பதை நீக்கிவிட்டு முறையே "08.08.2013" மற்றும் "1591/2013 என்று சேர்க்க வேண்டும்.

**திருத்தம் 5:**

பிராது பாரா 18ல் ஆ பகுதியில் 2 மற்றும் 3 வரிகளில் "27.12.2013" மற்றும் "2484/2013" என்பதை நீக்கிவிட்டு முறையே "08.08.2013" மற்றும் "1591/2013" என்று சேர்க்க வேண்டும்.

**திருத்தம் 6:**

சொத்து விபரத்தில் B அட்டவணையில் பரப்பு பகுதியில் "33" ஏர்ஸ் என்பதை "33.50" ஏர்ஸ் என்று திருத்தம் செய்தும் நான்கெல்லையை முழுவதும் நீக்கிவிட்டு பின்வருமாறு சேர்க்க வேண்டும்.

இளங்கோவன் புஞ்சைக்கு கிழக்கு, மகேஷ் புஞ்சைக்கு தெற்கு, அனிதா புஞ்சைக்கு மேற்கு, முத்தம்மாள் புஞ்சைக்கு வடக்கு.

எனவே, மனுவில் விவரிக்கப்பட்டுள்ளபடி பிராதை திருத்தம் செய்து கொள்ள அனுமதி அளித்து உத்திரவிடக் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:16:09 +0530

**2. 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைக் குறிப்பாணையின் சுருக்கம்:**

**(2.1)** வாதி தரப்பில் வாதியானவர் (PW1) நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வாதியை, பிரதிவாதியின் தரப்பில், ஒரு பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இந்த திருத்த மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றும்,

**(2.2)** திருத்த மனுவில் சொத்தின் விஸ்தீரணத்தையும், நான்கெல்லையையும் மாற்றம் செய்தால் வழக்கின் வழக்கு மூலம் மாறிவிடும் என்றும், எனவே இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபனை குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(2.3)** 7ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 03.02.2026 அன்று எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

3. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

**(5.1)** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் கட்சியாடி, விசாரணைக்கு வந்து மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:16:17 +0530

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக கெடு போடப்பட்டுள்ள நிலையில் பிராதில் சில திருத்தங்கள் செய்து வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது என்று கூறி, சில திருத்தங்களைக் குறிப்பிட்டு மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(5.2)** 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதியை ஒரு பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இந்த திருத்த மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல என்றும், திருத்த மனுவில் சொத்தின் விஸ்தீரணத்தையும், நான்கெல்லையையும் மாற்றம் செய்தால் வழக்கின் வழக்கு மூலம் மாறிவிடும் என்றும், எனவே இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபனை குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(5.3)** வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள திருத்தங்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. எனவே எதிர்மனுதாரர்களுக்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பிருப்பதாலும், மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:16:23 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:16:28 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.18 18:16:34 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு உத்தரவு</u>**
அசல் வழக்கு எண்.232/2020ல்
**இடைமனு எண்.15/2025**
நாள்.18.03.2026.